ஸ்ரீ

மதுரை

ஸ்ரீ கூடலழகர் கோயில் வரலாறு



தேவஸ்தான வெளியீடு

1961

ஸ்ரீ

E.P.I.RAM

மதுரை

ஸ்ரீ கூடலழகர் கோயில் வரலாறு

அறங்காவலர்கள் : (Trustees)

திரு. M. சீனிவாச நாயுடு அவர்கள்
அறங்காவலர்குழுத் தலைவர்.

,, P. M. ராமக்கோனார் அவர்கள்

,, C. M. சுப்பையா அவர்கள்

நிர்வாக அதிகாரி
,, E, பிச்சையா B. A., அவர்கள்

ஆகியோர்களால் வெளியிடப்பெற்றது.

தேவஸ்தான வெளியீடு

1961

உரிமைசெய்யப்பெற்றது] [விலை காசு 0-30

ஸ்ரீ

தமிழ்நாடு இந்து சமய அறநிலையப் பாதுகாப்புத்துறை
ஆணையாளர்

உயர்திரு M. S. சாரங்கபாணி முதலியார் B.A., B.L.,

அவர்கள் அருளிய

அணிந்துரை.

மிகத் தொன்மையும் பெருமையும் படைத்தது மதுரையம்பதி. இப்பதியின் ஓர் பகுதியில் அழகிய சொக்கநாதரும், மற்றோர் பகுதியில் கூடலழகப் பெருமாளும் எழுந்தருளிக் காட்சியளிக்கின்றனர். சைவ சமயாச்சாரியரால் போற்றித் துதிசெய்யப்பட்டவர் சொக்கப்பிரான் என்றால், திருமங்கையாழ்வார், திருமழிசையாழ்வார், பெரியாழ்வார் இவர்களால் பாடித் துதிக்கப் பெற்றவர் கூடலழகப் பிரான். இக்கூடலழகர் கோயில் நிர்வாகிகளின் சீரிய முயற்சியால் வரலாற்றுச் செல்வர் திரு. R. பஞ்சநதம் பிள்ளையவர்கள் கோயில் வரலாற்றினைச் சிறு நூலாக எழுதி உதவியிருக்கின்றார், மிகவும் எளிய நடையில் சிறந்த முறையில் இந்நூல் எழுதப் பட்டிருப்பது பெரிதும் பாராட்டுதற்குரியது. ஆலயத்தைப் பற்றிய எல்லாவகை வரலாறுகளும் இதில் இடம் பெற்றுள்ளன. எழில்மிக்க நிழற்படங்களின் சேர்க்கை இந்நூலினை அணிசெய்கின்றன. சிற்பங்களைப்பற்றிக் கூறும் பகுதி சிறந்து விளங்குகிறது. விழாக்களின் விவரங்களனைத்தும் இதில் விரிவாகக் காணப்பெறுகின்றன. இவ்வாலயத்தின் சிறப்பின் சின்னமாய் விளங்குவது

பெரியாழ்வாரின் "திருப்பல்லாண்டு" எனும் பாசுரம், பக்திப் பெருக்கால் தன்னினைவு கெட்டுப் பெருமானின் கல்யாண குண விசேஷங்களின் ஈடுபாட்டினால் எழுந்த பிரேமையின் எழுத்தோவியம் இப்பாசுரம். இதனை உள்ளன்போடு ஓதிவருபவர்க்கு எண்ணிலா நலன்களும் பெருகும் என்பது உறுதி. இப் பாசுரத்தால் சிறப்பிக்கப்படும் கூடலழகப்பெருமானின் ஆலய வரலாற்றினை எழுதி உதவிய ஆசிரியருக்கும், அப்பணியில் அவரை ஈடுபடுத்தி ஊக்குவித்த ஆலய நிர்வாகிகளுக்கும் வைணவ, ஆஸ்திக உலகம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது.

M. S. சாரங்கபாணி,

4—10—61

ShriBalaSubiksham Ramasubramanian

ஸ்ரீ

முன்னுரை.

தெய்வ உணர்ச்சியை உண்டாக்கும் சிறப்பிடங்களாக ஆன்றோர்கள் அமைத்த ஆலயங்கள் விளங்குகின்றன. 'ஆலயந்தொழுவது சாலவும் நன்று' என்றும் முன்னோர் கூறினர். தமிழ் நாட்டில் காணும் இடங்களிலெல்லாம் கண்ணைக்கவரும்படியான பல கோயில்கள் உள்ளன. அவைகளுள் பாண்டிநாட்டுக்குத் தலைநகரமான மதுரையம்பதியில் ஸ்ரீ கூடலழகர் கோயில் உள்ளது. திருமாலுக்குரிய 108 திருப்பதிகளுள் ஒன்று. திருமால் அமர்தல், நிற்றல், சயனித்தல் ஆகிய மூன்று திருக்கோலங்களிலும் காட்சி தருகிறார். பெரியாழ்வார், திருமங்கையாழ்வார், திருமழிசையாழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பெற்றது. கோயிலுக்கு வருவோர் கோயிலின் பெருமைகளையும் அறிந்துகொள்வது நலம். சென்னை அறநிலையப் பாதுகாப்பு இலாகாவின் (Hindu Religions and charitable Endowments) அனுமதிப்படி தலபுராணத்தைத் தழுவியும், தேவஸ்தானத்தார் கொடுத்த குறிப்புகளைக்கொண்டும் இவ் வரலாறு தொகுத்தெழுதப்பெற்றது.

பழங்காலச் சின்னங்களாகிய கோயிற் சிற்பங்களைப் பாதுகாப்பதிலும், தலவரலாறுகள் வெளிவரச் செய்வதிலும், சமய உண்மைகளைப் பரப்புவதிலும், திருக்கோயில்களைச் சீர்திருத்துவதிலும் தற்போதுள்ள அறநிலையத் துறை அமைச்சர் திரு. M. பக்தவத்சலம் B.A.,B.L.,

அவர்களும், அறநிலைத்துறை ஆணையாளர் திரு. M. S. சாரங்கபாணி முதலியார் B.A., B.L., அவர்களும், அறநிலைத் துறை துணை ஆணையாளர் திரு. A. சக்கரை B.A., B.L., அவர்களும், மற்றையோர்களும் ஆவன செய்து வருகிறார்கள்.

இதில் கோயில் விளக்கமும், தலப்பெருமைகளும், புராணக் குறிப்புகளும், கல்வெட்டுக்களும், ஆழ்வார்கள் பாடல்களும் சேர்க்கப்பெற்றுள்ளன. அன்பர்கள் படித்து ஸ்ரீ கூடலழகப்பெருமாளின் திருவருளைப் பெற்று நலமடைவார்களாக.

திருச்சிராப்பள்ளி
மலைக்கோட்டை

R. பஞ்சநதம் பிள்ளை,
தமிழ்ப் புலவர்

ஸ்ரீ பால சுபிக்ஷம்
இராமசுப்பிரமணியன்

திருச்சிராப்பள்ளி தமிழ்ப்புலவர்
வரலாற்றுச் செல்வர் - புலவர்மாமணி - ஆராய்ச்சிமணி
திரு. R. பஞ்சநதம் பிள்ளை அவர்களால்
எழுதப்பெற்றது.

ShriBalaSubiksham
Ramasubramanian

மதுரை ஸ்ரீ கூடலழகர் கோவில்



இராஜ கோபுரம்

மதுரை ஸ்ரீ கூடலழகர் கோவில்

மூலவர்

உள்ளடக்கம்.

		பக்கம்
1	கோயிலும் இருப்பிடமும் ...	1
2	நாடும் நகரமும் ...	4
3	கோயிலின் அமைப்பு ...	9
4	கோயிலின் படம் ...	12
5	மூர்த்திகளின் பெயர்கள் ...	14
6	தீர்த்தங்கள் ...	14
7	சுற்றுக் கோயில்கள் ...	14
8	தலப் பெருமைகள் ...	15
9	திருப்பணிகள் ...	16
10	சிற்பங்கள் ...	18
11	தினப்பூஜையும், திருவிழாக்களும் ...	20
12	வருமானமும், சொத்துக்களும் ...	23
13	நிர்வாகம் ...	24
14	கல்வெட்டுக்கள் ...	24
15	புராண வரலாறுகள் ...	27
16	இலக்கியப் பாடல்கள் ...	33

E.P.I.RAM

ஸ்ரீ

ஸ்ரீ கூடலழகர் கோயில் வரலாறு.

(திருக்கூடல்)

" பாரமாயபழ வினைப்பற்றறுத்து என்னைத்தன்
வாரமாக்கிவைத்தான் வைத்ததன்றி யென்னுள் புகுந்தான்
கோரமாதவம் செய்தனன்கொல் அறியேன் அரங்கத்தம்மான் திரு
வாரமார்பதன்றே அடியேனை யாட்கொண்டதே "

— (*திருப்பாணாழ்வார்*)

1. கோயிலும் இருப்பிடமும்.

ஆதிஅந்தங்கடந்த பரம்பொருளாகிய இறைவன் உலகத்திலுள்ள பல உயிர்களும் துன்பம் நீங்கி இன்பம் பெற்று உய்யும் வண்ணம் தன் உயர்ந்த நிலையிலிருந்து இறங்கி இப் பூவுலகத்தில் ஆங்காங்குள்ள பல தலங்களில் உருவத் திருமேனிகொண்டு எழுந்தருளியிருந்து தன்னைவழிபடும் அடியார்களுக்கு அருள்செய்து வருகிறான். அத்தகைய சிறந்த இடங்களே ஆலயங்கள் ஆகும். பசுவின் உடல் முழுதும் பால் மறைந்திருந்தபோதிலும் மடியின் மூலமாகவே

பால் வெளிப்படுவதுபோலவும், சூரியன் எங்கும் பரவியிருந்தாலும் பளிங்குக் கல்லின் (Lens) மூலமே கிரணங்கள் விரைவில் வெளிப்படுவது போலவும், நிலத்துக்கடியில் நீர் இருந்தபோதிலும் தோண்டிய இடத்தில்தானே நீர் தோன்றுவதுபோலவும், இறைவன்எங்கும்வியாபித்திருந்தபோதிலும்பெரியோர்கள் அமைத்த ஆலயங்களில் உள்ள மூர்த்திகளின் மூலமாகவே இறைவன் வெளிப்பட்டு அருள் செய்வான். "இருஞ்சுரபிக் கெங்கும் உருக்காண ஒண்ணாத பால் முலைப்பால் விம்மி ஒழுகுவதுபோல வெளிப்பட்டருள்வன் அன்பர்க்கே".

மேலும் பரம்பொருளாகிய இறைவனுக்கு பரத்வம், வியூகம், விபவம், அந்தர்யாமித்வம், அர்ச்சை என்னும் ஐந்து வகை நிலைகள் உண்டு. இவற்றுள் பரத்வமாவது பரமபதத்தில் எழுந்தருளியிருக்கும் நிலை. வியூகமாவது திருப்பாற்கடலில் எழுந்தருளியிருக்கும் நிலை. விபவம் என்பது ராமகிருஷ்ணாதி அவதாரங்கள். அந்தர்யாமித்வம் என்பது சராசரப் பொருள்களாகிய இயங்கும் பொருள்கள் – இயங்காப் பொருள்கள் எல்லாவற்றுள்ளும் எள்ளில் எண்ணெய் போல் மறைந்திருக்கும் நிலை. அடியார்களின் மனதில் வீற்றிருத்தலும் இதில் அடங்கும். அர்ச்சை என்பது விக்கிரங்களில் ஆவிப்பவித்தல்.

"வைகுந்த மேற்கொண்டிருந்தோர் வடிவைந்தின் வாழுமிடம்" என்று பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் கூறுகிறார். இந்த ஐந்து வகை நிலைகளில் அடியார்களுக்குக் காட்சிக்கெளிதாய், கோயிலில் உள்ள

மூர்த்திகளில் அருட்கோலத்துடன் விளங்குவதாகிய அர்ச்சை நிலையே சிறந்ததாகக் கூறுவர்.

"செய்ய பரத்துவமாய் சீரார் வியூகமாய்
தூய்ய விபவமாய்த் தோன்றிவற்றுள்—எய்துமவர்க்கு
இந்நிலத்தில் அர்ச்சாவதாரம் எளிதென்றான்
பன்னுதமிழ் மாறன் பயின்று"

(திருவாய்மொழி நூற்றந்தாதி)

"நீடியமால் நின்றான் இருந்தான் கிடந்தான்" என்றபடி இந்த அர்ச்சை நிலையில் பெருமாள் நின்ற திருக்கோலம், அமர்ந்த திருக்கோலம், பள்ளிகொண்ட திருக்கோலங்களைக்கொண்டு ஆங்காங்கு எழுந்தருளி யுள்ளார்.

இத்தலத்தில் பெருமாள் மூன்று கோலத்திலும் காட்சி தருகிறார். மூலவர் அமர்ந்த திருக்கோலத் திலும், விமானத்தின் முதல் மாடியில் நின்ற திருக் கோலத்திலும், 2-வது மாடியில் –உச்சிமாடியில் பள்ளிகொண்ட திருக்கோலத்திலும் காட்சி தருகிறார். இம் மூன்றும் ஒருசேர அமைந்திருப்பது இத் தலத் தின் தனிச் சிறப்பாகும்.

ஆதலின் பெறுதற்கரிய மக்கட் பிறப்பைப் பெற்றவர் அனைவரும் பரம்பொருளாகிய பதியை அன்பினால் வழிபட்டு அவன் வகுத்த நன்னெறியில் ஒழுகி அவனருளைப் பெற முயல்தல் வேண்டும்.

தென்னாடாகிய தமிழ்நாட்டில் பெருமாள் உறை யும் கோயில்கள் பல உள்ளன. அவை சிவன்

கோயில்கள், திருமால் கோயில்கள், முருகன் கோயில்கள், முதலாயின. அவைகளுள் திருமால் எழுந்தருளிய 108 திருப்பதிகளுள் கூடலழகர் கோயில் 47-வது திருப்பதியாகும். இத்தலம் திருக்கூடல், கதலிவன க்ஷேத்திரம், கூடலம்பதி, தென் மதுரை முதலிய பெயர்களாலும் வழங்கும். இத் தலத்தைக் குறித்துத் திருமங்கையாழ்வாரும், திருமழிசையாழ்வாரும், பெரியாழ்வாரும் பிரபந்தப் பாடல்கள் பாடியுள்ளார்கள். பிற்காலத்தில் பிள்ளைப் பெருமாள் ஐயங்காரும் ஓர் பாடல் பாடியுள்ளார்.

2. நாடும் நகரமும்.

வளம்மிக்க மதுரையம்பதியைத் தலைநகராகக் கொண்ட பாண்டிநாடு பழமையான புகழையுடையது. பாண்டிநாடே பழம்பதி எனப்பெற்றது. முத்தும் முத்தமிழும் பொலிவுற்று விளங்குவது. பைந்தமிழும் பலவளமும் பொருந்தியது. ‘நின்னுடு நல்ல தமிழுடைத்து’ என்று ஔவையாரால் புகழப் பெற்றது. “தன்னுர் தமிழளிக்கும் தண்பாண்டி நாடென்றும், பன்னுதொல்புகழ்ப் பாண்டி நன்னுடு” என்றும் போற்றப்பெற்றது. சேர பாண்டிய நாடு களில் தமிழ் நாடென்று வழங்குவது. சந்தனப் பொதியமும், தண்குமரித் துறையும், புண்ணியப் பொருநையாகிய தாமிரபரணி நதியும், தமிழ்கண்டதோர் வையை நதியும் தன்னகத்துடையது. செந்தமிழ் முனிவனை அகத்தியனும் சௌந்திரபாண்டியனும் சங்கப்புலவர்களும் தழைத்தினிதோங்கிய நாடு. அறம் முதலிய நான்கு பொருள்களும் விரவப்பெற்ற

நாடு. இத்தகைய பாண்டி நாட்டின் பெருமையை மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் பின் வருமாறு காட்டியுள்ளார்.

“புண்ணியக் குமரி என்று பொருநையென்று வானேரும்
நண்ணிய வையை என்று நயக்கும் வெண் குடிஞை யென்று
அண்ணிய ஈரிரண்டும் அறமுதல் நான்குமாகப்
பண்ணிய தவத்ததன்றோ பண்புசால் பாண்டி நாடு”

(மகா வித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை)

இத்தகைய பெருமைகளையுடைய பாண்டி நாட்டுக்குத் தலைநகரமாக மதுரை விளங்குகிறது. ஓர் காலத்தில் வருணன் ஏவிய மேகங்களைத் தடுக்கும் பொருட்டுப் பெருமான் விடுத்த நான்கு மேகங்களும் நான்கு மாடங்களாகக் கூடிக் காப்பாற்றியதால் நான்மாடக்கூடல் என்றும், கூடல் என்றும் பெயர்கள் வழங்கலாயின.

“வாடுவோர் தம்மைப்போற்ற வயங்கொளி மாநகர்க் கண்
கூடருமேக நான்கும் மாடமாக் கூடலாலே
நாடவாதி சயிப்ப நான்மாடக் கூடலென்று
பீடுடை நகர்க்கு நாமம் எங்கணும் பிறங்கிற்றன்றே”

(பழய திருவிளையாடல்)

தற்காலத்தில் எல்லா நாட்டு மக்களும் தரிசனத்துக்காக இவ்விடத்தில் வந்து கூடுகின்ற காரணத்தால் கூடல் என்ற பெயரும் அமையலாம் போலும்.

கூடல் நகரமாகிய மதுரையில் சங்கப் புலவர்கள் இருந்து தமிழ்ஆராய்ந்ததால் தமிழ் மதுரை, தமிழ்க் கூடல், சங்கத் தமிழ்க்கூடல், முச்சங்கம் வளர்கூடல், விரிதமிழ்க்கூடல், முத்தமிழ் மதுரை முதலிய பெயர்களும் வழங்கும். இவ்வாறு பல பெயர்களைப்பெற்ற மதுரையாகிய கூடற்பதியில் கூடலழகர் கோயில் கொண்டு விளங்குகிறார்.

மாண்புமிக்க மதுரை நகரம் அன்றும் இன்றும் என்றும் பெருமையுடையது. சென்னை மாநிலத்தில் இரண்டாவது பெரிய நகரம் கடல் மட்டத்திற்கு 330 அடி உயரமுள்ளது. நகராட்சி 1866ல் தொடங்கியது. சுமார் 10 மைல் சுற்றளவுள்ளது. ஜனத்தொகை சுமார் 4 லட்சம். பல கோயில்களைக் கொண்டுள்ளதால் **கோயில் நகரம்** என்றும், எப்போதும் திருவிழாக்கள் நடைபெறுவதால் **திருவிழா நகரம்** (City of Festivals) என்றும் பெயர்கள் வழங்கும். நகரில் சித்திரை வீதிமுதல் வெளிவீதிவரையில் பல வீதிகளைக் கொண்டது. நகரில் பல கல்லூரிகளும், உயர்நிலைப்பள்ளிகளும், பயிற்சிப் பள்ளிகளும், பல தொழிற்சாலைகளும், பல வைத்தியசாலைகளும், சத்திரங்களும் ஆங்காங்குள்ளன. திருமலை நாயக்கர் மகால், பத்துத்தூண், தெப்பக்குளம் முதலியனவும் பார்க்கவேண்டியவை. மதுரை நகரம் வாணிகத் துறையில் தென்னாட்டுக் கேந்திரஸ்தலமாக விளங்குகிறது. நகரில் T. V. S. கம்பெனியாரின் மோட்டார் வண்டிகள் (Town Bus) ஓடிக்கொண்டிருக்கின்றன. மோட்டார் நிலையத்திலிருந்து (Bus Stand) வெளியூர்

களுக்குப் பல வண்டிகள் போய்க்கொண்டிருக்கின்றன. மதுரையைச்சுற்றிலும் பசுமலை, யானைமலை, பன்றிமலை, நாகமலை முதலிய மலைகள் உள்ளன. யாத்திரைவாசிகள் தங்குவதற்கு முசாபுரி பங்களா, மீனாட்சி நிலையம், மங்கம்மாள் சத்திரம், கருப்பட்டிச் சத்திரம், குன்னத்தூர் சத்திரம், லாலா சத்திரம், தேவாங்க செட்டியார் சத்திரம், மார்வாடிச்சத்திரம் முதலியன உள்ளன.

தென் ரயில்வேயில் தென் பகுதியில் மதுரைச் சந்திப்பு பெரிய நிலையமாக உள்ளது. சேர சோழ பாண்டிய நாட்டாரும், பிற நாட்டாரும் சந்திக்கும் படியான — கூடும்படியான இடம், ரயில் நிலையத்துக்கு முன்னே அழகாகக் கட்டப்பெற்ற புதிய கட்டிடம் உள்ளது. இங்கிருந்து இராமேஸ்வரம், விருதுநகர், திண்டுக்கல், போடிநாயக்கனூர் முதலிய ஊர்களுக்குத் தனித்தனியே கிளைப்பாதைகள் செல்கின்றன.

மதுரையை அடுத்துள்ள பிற தலங்கள் :-

திருப்பரங்குன்றம்.

நகரின் தென்மேற்கில் 5 மைல்தூரத்திலுள்ளது முருகனுக்குரிய ஆறுபடை வீடுகளில் ஒன்று.

அழகர் கோயில்.

மதுரைக்கு வடக்கில் 13 மைல் தூரத்தில் உள்ளது. திருமாலுக்குரிய 108 திருப்பதிகளுள் ஒன்று. ஆறுபடை வீடுகளில் ஒன்று, திருமாலிருஞ்சோலை என்றும், பழமுதிர் சோலை என்றும் கூறப்படும்.

யானை மலை:

நகரின் வடகிழக்கில் 5 மைல் தூரத்தில்உள்ளது 250 அடி உயரம். அடிவாரத்தில் பெருமாள் கோயில் உள்ளது.

திருமோகூர்:

மதுரைக்கு வடகிழக்கில் 7 மைல் தூரத்தில் உள்ளது. திருமாலுக்குரிய 108 திருப்பதிகளுள் ஒன்று.

திருவாதவூர்:

மதுரைக்குத் தென்கிழக்கில் 15 மைல் தூரத்தில் உள்ளது. மாணிக்கவாசகர் அவதரித்த தலம். திருவாதூர் என வழங்குகிறது. 14—9—59ல் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

MADURAI:

Popularly known as the "City of Festivals" is the second largest City in the Presidency. It was the seat of the ancient Pandian Kingdom which lasted from the era before Christ, up to the 17th centuary. Madura was the centre of Tamil culture for several centuries. The design of the massive temple in the heart of the city dedicated to Goddess Meenakshi displays an escuberance of fancy and a lavishness of labour rarely to be met with elsewhere. The Thirumalai Naick's Mahal. which was built as a Palace is the first specimen of secular architecture in India.

(S. I. R. — PLACES OF INTEREST)

3. கோயிலின் அமைப்பு.

மதுரை ஜில்லா, மதுரை ரயில் நிலையத்திலிருந்து (Railway Station) தென்கிழக்கில் 2 பர்லாங் தூரத்தில் கூடலழகர் கோயில் உள்ளது. மதுரை மோட்டார் நிலையத்திலிருந்து (Bus Stand) கிழக்கே ஒரு பர்லாங் தூரத்தில் உள்ளது. 108 திருப்பதிகளுள் 47 வது தலம். கோயில் கிழக்கு நோக்கிய சந்நிதி. கோயிலில் முக்கியமாகப் பெருமாள், நாச்சியார், ஆண்டாள் முதலிய மூன்று சந்நிதிகள் உள்ளன. கோயிலுக்கு வெளியே ஓர் பிராகாரமும், உள்ளே பெருமாள் கோயிலில் இரண்டு சுற்றும், நாச்சியார் கோயிலில் ஓர் சுற்றும் உள்ளன. கோயிலுக்கு முன்புறம் 5 கண்களைக்கொண்ட கோபுரவாயில் உள்ளது. உள்ளே நுழைந்தால் முன்னே 2 மண்டபங்கள் உண்டு. இதைக்கடந்து மேலே ஏறிச் சென்றால் பெருமாள் கோயில் நடுமண்டபத்தில் கருடன், அனுமான், சேனை முதலியார், ராமர், கிருஷ்ணன் முதலியோருடைய சந்நிதிகள் உள்ளன, மூலவர் கூடலழகர் ஸ்ரீதேவி, பூதேவிகளுடன் அமர்ந்த திருக்கோலத்தில் எழுந்தருளியுள்ளார். மூலவர் மண்டபத்தைச் சுற்றிலும் 2 சிறிய பிராகாரங்கள் உள்ளன. மூலவருக்கு மேலே அஷ்டாங்க விமானம் ஒன்றும் ஓரிதள விமானம் 5 சிகரங்களுடன் விளங்குகிறது.

இது 125 அடி உயரமுள்ளது. மேல் விமானத்தில் 2 மாடிக் கட்டிடங்கள் உள்ளன. முதல் மாடியில் பெருமாள் நின்ற கோலத்திலும், 2-வது மாடியில் பள்ளிகொண்ட கோலத்திலும் காட்சி தருகிறார். எனவே இக்கோயிலில் பெருமாள் அமர்ந்த கோலம், நின்ற கோலம், கிடந்தகோலம், ஆகிய மூன்று நிலைகளிலும் காட்சி தருகிறார். விமானத்தின் இரண்டு மாடிகளில் ஒவ்வொன்றிலும் இரண்டு சிறிய பிராகாரங்கள் உள்ளன. பெருமாள்கோயிலைச் சுற்றி ஓர் பிராகாரம் உள்ளது. அதில் மேற்குப்புறத்தில் சக்கரத்தாழ்வாரும், நரசிம்மர் சந்நிதியும் உள்ளன. வடபுரத்தில் ஆண்டாள் சந்நிதியும், சொர்க்கவாசலும் உள்ளன. வடகிழக்கில் மணவாளமாமுனி சந்நிதி, நவக்கிரகங்கள், பள்ளியறை, யாகசாலை முதலியவைகள் உள்ளன. பெருமாள் கோயிலுக்குத் தென்புறத்தில் மதுரவல்லித்தாயார் சந்நிதி கிழக்கு நோக்கியுள்ளது. மூலஸ்தானத்தில் தாயார் வீற்றிருக்கிறார். இக்கோயிலிலும் ஓர்பிராகாரம் உள்ளது. முன்னே வசந்த மண்டபம் உள்ளது. அதில் தற்போது தேவஸ்தான அலுவலகம் (Office) உள்ளது. அதற்கு எதிரில் ஹேமதீர்த்தம் உள்ளது. தென்புறத்தில் மடைப்பள்ளியும், ஆழ்வார் முதலியோர்களுடைய சந்நிதிகளும் உள்ளன. ஆழ்வார்களில் பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார்,

திருமங்கையாழ்வார், பெரியாழ்வார், நம்மாழ்வார், திருமழிசையாழ்வார், குலசேகராழ்வார், தொண்டரடிப்பொடியாழ்வார், திருப்பாணாழ்வார், மதுரகவி ஆழ்வார், ஆகியோர்களும், நாதமுனிகள், ராமானுஜர் கூரத்தாழ்வார், தேசிகர் முதலியோர்களும் திருக்கோலங்கொண்டு எழுந்தருளியுள்ளார்கள். இவர்கள் எல்லோருக்கும் உற்சவ மூர்த்திகளும் உள்ளன. கோயிலுக்கு வெளியே அத்தியயன மண்டபம் என்னும் நான்கு கால் மண்டபம் உள்ளது. கோயிலின் சுற்றளவு குழமேலடி 360, தென்வடலடி 300. இக்கோயில் தென் கலை முறைக்கோயில். கோயிலின் அமைப்பைக் காட்டும் படம் தனியே சேர்க்கப் பெற்றுள்ளது.

ShriBalaSubiksham
Ramasubramanian

4. கோயிலின் படம்.


மேற்கு
11
12
19
9
20
21
தெற்கு
வடக்கு
6
5
7
10
18
8
14
4
13
22
17
3
23
2
2
24
15
16
25
1
கிழக்கு

எண்கள் விஃ

1 முன் கோபுர வாயில்
2 மண்டபங்கள்
3 கொடிமரம்
4 கருடன் (பெரிய
5 அனுமார் (சிறிய
6 சேனை முதலியார்
7 ராமர் சந்நிதி
8 கிருஷ்ணன் சந்நிதி
9 மூலவர் — கூடலழகர், உற்சவர். வியூக சௌந்தரராஜப்பெருமாள்
10 விமானப் படிகள்
11 சக்கரத்தாழ்வார்
12 நரசிம்மர் சந்நிதி
13 நாச்சியார் கோவில் நுழைவாசல்
14 வசந்த மண்டபம் (Office)
15 ஹேமதீர்த்தம் (புஷ்கரணி)
16 மடைப்பள்ளி
17 ஆழ்வார்கள் முதலியோர்கள்
18 முன் வாயில்
19 நாச்சியார் (மதுரவல்லி)
20 ஆண்டாள்
21 சொர்க்கவாசல்
22 மணவாளமாமுனி
23 நவக்கிரகங்கள்
24 பள்ளியறை
25 யாகசாலை

ShriBalaSubiksham
Ramasubramanian

...களின் பெயர்கள்

...வருக்கு கூடலழகர் என்னும்
...மூலவர் உபய நாச்சியார்களு
...ல் எழுந்தருளியுள்ளார். கல்
...ருமாள் என்று காணப்படு
...ாண்ட திண்தோளர் என்று
...யர் வியூக சௌந்தரராஜப்
...து. நாச்சியார் பெயர் மதுரவல்லி
... வகுளவல்லி, மரகதவல்லி, வரகுணவல்லி,
மதுரவல்லி என்னும் பெயர்களும் வழங்கும். ஆழ்வார் முதலியோர்களுக்குத் தனித்தனியே திருவுருவங்கள் உள்ளன. ஆண்டாளுக்குத் தனிச் சந்நிதி உள்ளது.

6. தீர்த்தங்கள்

1. **ஹேமதீர்த்தம்:** வசந்த மண்டபத்துக்கு எதிரில் உள்ளது.

2. **தெப்பக்குளம்:** கோயிலுக்கு வடக்கில் நகர மண்டபத்து வீதியில் (Town Hall Road) உள்ளது. இதில் மாசிமாதத்தில் தெப்பவிழா நிகழும். திருப்பரங்குன்றம் செல்லும் வழியில் இக்கோயிலுக்குறிய ஓர் நந்தவனம்—பூந்தோட்டம் உள்ளது.

7. சுற்றுக்கோயில்

இக்கோயிலைச் சேர்ந்த வீரராகவப் பெருமாள் கோயில் மதுரை தென்னலைக்காரத்தெருவில் உள்ளது. மூலவரின் பெயர் வீரராகவப் பெருமாள் என்பது.

நாச்சியாரின் பெயர் கனகவல்லித்தாயார், காலையில் 10 மணிக்கும் மாலையில் 7மணிக்கும் 2 காலப்பூஜைகள் நிகழ்கின்றன. சில மாதங்களுக்கு முன் இக்கோயிலுக்குப் புதிதாய்ச் செய்யப்பட்ட வெள்ளிக் குதிரை வாகனம், அறநிலையக் கமிஷனர் அவர்கள் முன்னிலையில் திறக்கப்பெற்றது. மதுரை ஜில்லா சமயநல்லூரில் இக்கோயிலுக்குச்சொந்தமாக 6ஏக்கர் 6 செண்ட் நன்செய் நிலமும், 2 ஏக்கர் 2 செண்ட் புன்செய் நிலமும் உள்ளன. இவைகளின் மூலமாய் சுமார் 1000 ரூபாய் ஆண்டுதோறும் வருமானம்வரும். சுமார் 2000 ரூபாய் மதிப்புள்ள திருவாபரணங்கள் உள்ளன.

8. தலப்பெருமைகள்

இத்தலம் திருமாலுக்குரிய 108 திருப்பதிகளுள் ஒன்று. திருமாலுக்குரிய நின்றகோலம் — கிடந்த கோலம்—அமர்ந்த கோலம் ஆகிய மூன்று கோலங்களும் அமையப்பெற்றது. மூலவர் அமர்ந்த கோலத்தில் உள்ளார். மற்ற இரண்டு கோலங்கள் விமானத்தில் உள்ளன. திருமங்கைஆழ்வார் — திருமழிசை ஆழ்வார்களால் பிரபந்தம் பாடப்பெற்றது. பெரியாழ்வார் திருமாலே பரம்பொருள் என்று உண்மைப் பொருளை நிலைநாட்டிப் பாண்டியன் அமைத்த பொற்கிழியைப் பெற்றுப் பல்லாண்டு பாடினார். இதை "வேதங்கள் ஓதி விரைந்து கிழியறுத்த பட்டர்பிரான்வந்தார்" என்றும், பாண்டியன்கொண்டாடப் பட்டர்பிரான் வந்தானென்று ஈண்டிய சங்கம் எடுத்தூத" என்றும், "சென்று கிழியறுத்து மால்

தெய்வமென்றான் வாழியே'' என்றும் ஆன்றோர்கள் புகழ்ந்து கூறியுள்ளார்கள். திருமால் கோயில்களில் அமையப் பெறாத நவக்கிரகச் சந்நிதியை உடையது. அஷ்டாங்க விமானத்தை உடையது. பல கல்வெட்டுக்களை உடையது. வழிபாட்டுக்குரிய பல கட்டளைகளை உடையது. அழகிய சிற்பங்கள் அமையப் பெற்றது. எனவே மதுரையாகிய கூடற்பதியில் ஒரு பகுதியில் அழகுடையவராகிய சொக்கநாதரும், மற்றோர் பகுதியில் கூடலழகரும் எழுந்தருளிக் காட்சித் தருகின்றார்கள். தலபுராணத்தின்படி காசிபர், பிருது மன்னன், புலத்தியர், அம்பரீட மன்னன், ஊர்வசி, தேவர்கள், மலையத்துவச பாண்டியன் முதலியோர் இத்தலத்துப் பெருமானை வழிப்பட்டுப் பேறுபெற்றுள்ளார்கள். திருமாலின் அழகை "அச்சோ ஒருவர் அழகியவா'' என்று திருமங்கையாழ்வார் புகழ்ந்து கூறுகிறார்.

9. திருப்பணிகள்

முன்னோர்கள் ஏற்படுத்திய கோயில்களுக்கு எவ்வித தீங்கும் நேராதபடி பாதுகாத்து அவ்வப்பொழுது ஆவன செய்யவேண்டும். புதியதோர் கோயிலை அமைப்பதைப் பார்க்கிலும் பழமையான கோயிலைப் புதுப்பித்தல் மிக்க புண்ணியத்தைத்தரும் என்பர். "புதிதுறப்பணிகள் வேறு புரிவதின் பழய தொன்றை விதியுளி புதுக்குவோர்க்கு மிகப் புண்ணியந்தான் எய்தும்'' என்று ஆன்றோர் கூறியுள்ளார்கள்.

"மாதவர் மடங்களாதி வரதன் மந்திரங்களாதி
நாதமா லிங்கமாதி நளின புட்கரணியாதி
சேத முற்றிடின் முன்போல் செய்பவர்க்குறு
பலன்தான்
ஓதுமுன் செய்தோர் தம்மில் ஆயிரங் குணித
மோங்கும்"

(சிவ புண்ணியத் தெளிவு)

ஆதியில் இக்கோயில் பாண்டியமன்னர்களாலும், நாயக்க மன்னர்களாலும் திருப்பணி செய்யப் பட்டது. பூஜைகளுக்குரிய அறங்களும் செய்யப் பட்டன. பிறகு அவ்வப்போது பல திருப்பணிகள் நடந்து வந்திருக்கின்றன.

ஸ்ரீ அழகப்பச் செட்டியார் அவர்கள் தர்மகர்த்தா வாய் இருந்தபோது தமது சொந்தத் தொகையில் 1923-ம் ஆண்டில் சுமார் ஒரு லட்சம் ரூபாய் செலவு செய்து ஸ்ரீ மதுரவல்லித் தாயார் கோயில் உள் மண் டபம் சலவைக்கற்களால் அமைக்கப்பெற்றும், சுற் றுப்பிரகாரம், விமானம் முதலியன புதுப்பிக்கப் பெற்றும், சொக்கட்டான் மண்டபம் தளவரிசை போடப்பட்டும், ஹேம புஷ்கரணித் தீர்த்தம் கருங் கற்கட்டிடமாகப் புதுப்பிக்கப் பெற்றும் பல திருப் பணிகள் நிறைவேறின. 27—8—1945ல் இராஜகோ புரம் கட்டி முடிக்கப்பெற்றது. பிறகு 4—12—44ல் ஆடிவீதி மண்டபம் முழுவதும் கல்தளவரிசை போடப்பட்டது. ஆண்டாள்சந்நிதிக்கு முன்புறத்தில் கல்தளவரிசையிடப்பட்டது. பிறகு 30—9—43ல் வசந்த மண்டபம் கட்டி முடிக்கப் பெற்று; தம்

போது தேவஸ்தான அலுவலகமாக (Office) இருந்து வருகிறது. பிறகு 13—9—44ல் மணவாள மாமுனி மண்டபம் கட்டப்பட்டது. இவ்வாறு பல திருப் பணிகள் அவ்வப்போது நிகழ்ந்து வந்திருக்கின்றன. ஓர் யானை கோவிலுக்கு நன்கொடையாக கொடுக்கப் பெற்றது. கோயில் திருப்பணிகளில் பங்கெடுத்துக் கொண்டவர்கள் ஸ்ரீமான்கள் முத்திருளப்பக்கோனர், ராஜகோபாலய்யங்கார், பாலுசாமி ஐயர், E. M. கோபாலகிருஷ்ணக் கோனர், சாமிநாத பிள்ளை, மைசூர் ராஜா ஐயங்கார், சேஷையர் முதலியோர் ஆவர்.

10. சிற்பங்கள்

பெருமாள் கோயில் முன்கோபுரம் 5 கண்களை யுடையது. உள்பண்டபத்தின் தென்புறத்தோற்றம் மிகச் சிற்பம் பொருந்தியது. வடபுறத்தில் வெறும் சுவராக உள்ளது. ஒரு காலத்தில் ஊமைத் துரை இவ்விடத்தில் ஒளிந்திருந்ததாகவும், இதன் காரணமாக ஆங்கிலேயர் குண்டுகளால் தாக்கியதால் வட புறச் சுவர் பழுதுபட்டிருப்பதாகவும் சொல்லப் படுகிறது. ஆடிவீதி மண்டபத் தூண்களில் யாளி களின் சிறபம் உள்ளது. மூலவர் சுதையாலாகிய சிற்பம். அம்மனும் பிற வடிவங்களும் கருங்கற் சிற்பங்கள். தென்புற மண்டபத் தூண்களில் இரு வரின் சிலைகள் உள்ளன. திருப்பணி செய்தோரா யிருக்கலாம் என்று சொல்லப்படுகிழது. மூலவர் விமானம் அஷ்டாங்க திரிதள விமானம் 5 சிகரங்களை யுடையது.இரண்டு மாடிகளையுடையது. திருமாலின்

மூன்று வகை நிலைகளில் மூலவர் அமர்ந்த கோலத்திலுள்ளார். மற்ற இரண்டு கோலங்கள் மேல்மாடிகளில் உள்ளன. விமானத்தின் முதல் மாடியில் பெருமாள் நின்ற கோலத்தில் உள்ளார். சுற்றிலும் எட்டு திக்குப்பாலகர்களான அக்கினி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன். ஈசானன், இந்திரன் முதலியோரின் சிற்பங்கள் உள்ளன. இவர்களுடையவாகனங்களாகிய ஆடு, எருமை, நரன், மகரம், மான், குதிரை. ரிஷபம். யானைகளின் சிற்பங்களும் உள்ளன. 2வது மாடியில் பெருமாள் பள்ளி கொண்ட திருக்கோலத்தில் உள்ளார். சுற்றிலும் திருமாலின் பத்து அவதாரக் கோலங்கள் சுதையால் அமைக்கப்பட்டுள்ளன. மூலவர் மண்டபத்தில் இருப்பதுபோலவே விமானத்தின் மாடிகள் ஒவ்வொன்றிலும் தனித்தனியே இரண்டு சுற்றுப் பிராகாரங்கள் உள்ளன. எனவே இவ்விமானம் பல சிற்பங்களுடன் தனிச் சிறப்பாய் விளங்குகிறது.

நாச்சியார் கோயிலின் விமான மண்டபம் உள் மண்டபம் சலவைக் கற்களால் ஆகியது. முன்புறம் 14 தூண்களைக்கொண்டது. இரண்டு தூண்களில் இசைபொருந்தியுள்ளது. கருங்கல் பலகணிகள் அமைக்கப்பட்டுள்ளன. ஆண்டாள் சந்நிதியில் திருப்பாவைப் பாடல்கள் சித்திரங்களும் விளக்கப்பெற்றுள்ளன. மூலவரின் சுதைச் சிற்பம் தரிசிப்பவர்களின் கண்களைக்கவரும் வகையில் அமைந்துள்ளது. சுற்றுச் சுவர்களில் பல கல்வெட்டுச் சிற்பங்களும் உள்ளன. எனவே கூடலழகர் எழுந்தருளிய திருக்

கோயில் அழகிய சிற்பங்களையும் கொண்டு விளங்குகிறது.

" There are many other temples in Madura- but space does not allow of any detailed account of them. The biggest is that to the vaishnavite deity Perumal in the south west part of the town. Near it is a tank called the Perumal Teppakulam to distinguish it from the other (Vandiyur Teppakulam). The outer walls of this building bear several marks made by round sheets. The central shrine was designed on regal lines but was apparently never finished. The stone work in this— especially the pierced granite windows all of different delicate designs which light the passage round the inner shrine is as excellent as anything in Madura ".

(Madurai District Gazetteers)

11. தினப் பூஜையும் திருவிழாக்களும்.

இக் கோயிலில் தினந்தோறும் 6 கால பூஜைகள் நடைபெறுகின்றன. பொங்கல் காலம் காலை 8 மணிக்கும், சுற்றுக்கோயில்—செல்வர் புறப்பாடு 10 மணிக்கும், உச்சிக்கால பூஜை பகல் 12 மணிக்கும், மாலைப் பூஜை 5 மணிக்கும், சுற்றுக்கோயில்—செல்வர் புறப்பாடு இரவு 7 மணிக்கும், சம்பா காலம் இரவு 9 மணிக்கும் நிகழ்கின்றன. இங்குவைகானச முறைப்படி பூஜைகள் நடைபெறுகின்றன. பூஜை

நேரங்களில் பெரிய மணி அடிக்கப்படும். அந்தந்த நேரங்களில் சென்று வழிபடுவதால் மிக்கபுண்ணியம் உண்டு.

“ வினையால் அடர்ப்படார் வெந்நரகில் சேரார்
தினையேனும் தீக்கதிக்கண் செல்லார் — நினைதற்
கரியானைச் சேயானை ஆயிரம்பேர்ச் செங்கண்
கரியானைக் கைதொழுதக் கால் ”

(பொய்கையாழ்வார்)

மேலும் இக்கோயிலில் பல பூஜைகளுக்குரிய கட்டளைகள் உள்ளன. பல உபயதார்களால் நடத்தப் பெறுகின்றன. மாதந்தோறும் திருவோணக்கட்டளை நிகழ்கின்றது. வைகாசி பிரம்மோற்சவம் 2-ம் நாள் கட்டளை, விசுவரூபக்கட்டளை, திருக்கல்யாணக் கட்டளை, பாலாபிஷேகக் கட்டளை, கிருஷ்ணபட்ச ஏகாதசிக்கட்டளை, விஜயதசமி நவராத்திரிக்கட்டளை அனுப்பானடி பாரிவேட்டை, சிந்தாமணி கஜேந்திர மோட்சம், கோவர்த்தனகிரி உற்சவக்கட்டளை முதலிய கட்டளைகளும் நடைபெறுகின்றன. E. M. கோபாலகிருஷ்ணக் கோனார் தனி மூலதனம் ஏற்படுத்தித்தினந்தோறும் தேசாந்திரிகளுக்குப் பிரசாதம் வழங்கப்படுகிறது.

ஆண்டுதோறும் வைகாசி மாதத்தில் பிரமோற்சவம் பெருவிழா 12 நாட்கள் வரையில் நடைபெறும். தினந்தோறும் காலையில் பெருமாள், நகரிலுள்ள பல மண்டபங்களுக்குப் பல்லக்கில் புறப்பட்டுச் சென்று தங்கி இரவில் பல வாகனங்களில் எழுந்தருளி காட்சி கொடுப்பர்.

மாத விழாக்கள் :— மாதந்தோறும் பஞ்சபருவ உற்சவங்கள்—ஐந்து நாட்களில் விழாக்கள் நிகழும் மாதப்பிறப்பு, அமாவாசை, இரண்டு ஏகாதசி நாட்கள், திருவோணம் ஆகிய நாட்களில் விசேட வழிபாடுகள் நிகழும். பஞ்ச பருவ உற்சவம் வெள்ளிக்கிழமை நேர்ந்தால் பெருமாள் புறப்பட்டு நாச்சியார் சந்நிதிக்குச் சென்று ஊஞ்சலாடித் திரும்பும். வாரத்தில் வெள்ளிக்கிழமை தோறும் தாயார் புறப்பாடு உண்டு. ஆனி மாதம் சுவாதி நாளில் கருடசேவையும், ஆடியில் 10 நாள் பூர உற்சவமும், ஆவணியில் 5 நாட்கள் பவித்திரோத்சவமும், ஒருநாள் கோகுலாஷ்டமி விழாவும், உறியடியும் புரட்டாசியில் நவராத்திரி விழாவும், விஜயதசமி விழாவும், பௌர்ணமி நாளில் பாலாபிஷேகமும் பஞ்சகருட சேவையும் (ஐந்து கருட வாகனக் காட்சியும்) கார்த்திகை நாளில் தீபக் காட்சியும் நிகழும். மார்கழி மாதத்தில் வைகுண்ட ஏகாதசி விழாவில் பகல் பத்தின் முதல் நாளில் வஸ்து நிர்ணய உற்சவமும் (பரம்பொருளை நிலைநாட்டல்) பகல் பத்து நாளும், சொர்க்கவாசல் திறப்பும், இராப் பத்து 10 நாளும் சிறப்பாக நடைபெறும். தைமாதப் பிறப்பில் தாயார் சந்நிதியில் மாலைமாற்றுதலும், 2-ம் நாள் பாரிவேட்டையும், தெப்பவிழா 10நாட்கள் வரையிலும் நிகழும் இறுதிநாளில் பெருமாள் புறப்பட்டுத் தெப்பக்குளத்திற்குச் சென்று இரவில் தெப்பத்தில் அமர்ந்து காட்சி கொடுப்பர்.

பங்குனி மாதத்தில் கோடை வசந்த விழா 5 நாட்கள் வரையில் நிகழும். இம் மாதத்தில் ஓர்

நாளில் கஜேந்திர மோட்ச உற்சவமும், ஓர் நாளில் கோவர்த்தனகிரி விழாவும், உத்திரநாளில் திருக்கல்யாண உற்சவமும் நடைபெறும். மனிதராய்ப் பிறந்தோர் அனைவரும் பெருமாளுக்கு நடைபெறும் உற்சவங்களைக் கண்ணாரக்கண்டு தரிசித்து வேண்டும் நலன்களைப் பெறுவார்களாக.

12. வருமானமும், சொத்துக்களும்.

இக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள் மதுரை தாலூகா காளிகாப்பான் கிராமத்தில் சுமார் 9 ஏக்கர் 90 செண்டு நன்செய் நிலங்கள் உள்ளன. கோயிலில் கல்யாணங்கள் நடைபெறுகின்றன. ஓர் கல்யாணத்திற்கு ரூ. 7—12—0 கட்டணம்வசூலிக்கப் படுகிறது. கட்டிட வாடகை, உண்டியல், கல்யாணங்கள் — சர்க்கார் மோகினித்தொகை முதலியவைகளின் மூலமாயும் வருமானங்கள் வருகின்றன,

வருமான விபரம் ;—

ரொக்க குத்தொகை	...	1000—00
நிலங்கள் குத்தகை	...	2000—00
கட்டிட வாடகை	...	9000—00
ரொக்க உபயம்	...	4000—00
உண்டியல் வரவு	...	3000—00
கல்யாணங்கள்	...	1000—00
அர்ச்சனை	...	4000—00
தஸ்திக்	...	3800—00
முதலீடு வட்டி	...	1500—00
		29,300—00

மேலும் சுமார் ஒரு லட்சத்துப் பதினாயிரம் ரூபாய் (110000) மதிப்புள்ள திருவாபரணங்கள் உள்ளன.

குறிப்பு :- இக்கோயில் நித்தியப்படி நைவேத்தியத்துக்கும் திருநாள் கட்டளைக்கும் பெருங்குடி, இரட்டைக்குளம், வெண்ணாநேந்தல், குமுளங்குளம், சிந்தாமணிப்பற்று, முள்ளிப்பள்ளம் முதலிய கிராமங்கள் விடப்பட்டுள்ளதாகக் கல்வெட்டுக்களால் தெரியவருகிறது. (கல்வெட்டு 559)

13. நிர்வாகம்.

இக் கோயிலின் நிர்வாகம் ஆதியில் மதுரை தேவஸ்தானக் கமிட்டியாரின் மேற்பார்வையில் இருந்துவந்தது. பிறகு 1949ல் புதிய திட்டம் (scheme) ஏற்பட்டு (B.O. No. 2034 dated 12-4-49) கழிதப்படி தற்போது சென்னை அறநிலையப் பாதுகாப்புத்துறையின் (Hindu Religious and charitable Endowments) நேர் நிர்வாகத்தில் இருந்துவருகிறது. அறநிலையத்தாரால் நியமிக்கப்பெற்ற அறங்காவலர்களும் (Trustees), நிர்வாக அதிகாரியும் கோயில் காரியங்களைக் கண்காணித்துவருகிறார்கள்.

14. கல் வெட்டுக்கள்

கூடலழகர் கோவிலுக்குரிய 3 கல்வெட்டுக்கள் பெருமாள் கோயில் முன் மண்டபத்துச் சுவர்களில் உள்ளன. அவைகள் சர்க்காரால் 1911ல் நகல் எடுக்கப்பட்டுத் தென்னிந்தியக் கல்வெட்டுத்தொகுதிகளில் 557. 558, 559 எண்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவைகளின் விவரங்கள் வருமாறு:-

1. 557/11. (south wall of the Mantapam in-front of the Kudal Alagar Temple).

"ஸ்வஸ்திஸ்ரீ பிலவங்க வருடம் புரட்டாசிமீ முதல் இராக்கிஷ வருஷத்துக்குச் செல்லும் நள வருடம் ஆனிமீ வரைக்கு இராமராசவிட்டல் தேவ மகாராசாவின் வசவண நாயக்கர்—திம்மப்ப நாயக்க ரய்யன் பாரபத்தியத்தில் கூடலழகிய பெருமாள் கோயில் கெர்ப்பக்கிரக மூன்றுந் திருநிலைக்காலில் பஞ்சாங்கம் நீங்கலாக அத்தமண்டபம் திருப்பணிக்கு கந்தாடை கொளமன் உபயமாக மதுரை ஆசாரிமார் இட்ட அடங்கல் பட்டோலைப்படிக்கு (1600)க்கு கந்தாடை அண்ணனுக்குப் புண்ணியமாக கந்தாடை கொளமன் கொண்டுவந்துசமர்ப்பித்த ௲உ௱௫௰ (1250) கிட்டரா வகையில் இந்த மண்டபம் இம்முடி எல்லப்ப நாயக்கரய்யன் பாரபத்தியத்தில் நிறை வேறினது".

2. 551/11 (Northwest and south walls of the central shrine—Kudal Alagar Temple)

"பெருமாள் திருமுன் விண்ணப்பஞ் செய்த படிக்குப் பெருமாள் திருவுளமுகந்து திருவாய்மலர்ந் தருளி நவகுமாரன் வசவண நாயக்கர் — திம்மப்ப நாயக்கன் தினமொன்றுக்கு கட்டளை இட்டதில் அமுதுபடிக்கு நெல்லுக்கும் மெல்மெல் வெச்சம் (பணம்) x — x இரண்டு சதம் வருஷம் ஒன்று — திருவீதியில் ஒரு மனையும் குடுத்து — கட்டளை யிடுவோம் என்று பெருமாள் திருமுகம் திருவுள்ளம்

பற்றி அருளினபடிக்குத் திருவீதியில் உள்ளவர் — விநியோகமும் குடுத்து மாடத் திருவீதியில் ஒரு மனையும் — அமுது தினமொன்றுக்கு முக்குறுணி அமுதுபடி — மாகயிருக்கவும். அனுபவிக்கும்படிக்கு வசவண நாயக்கர்—திம்மப்ப நாயக்கர் அவர்களுக்கும் பெருமாளும் (கல்வெட்டு முடியவில்லை)

3. 559/11. மேற்படி இடத்தில் உள்ளது.

“கூடலழகிய பெருமாளுக்கு நித்யபடி நைவேத்தியத்துக்கும் திருநாள் கட்டளைக்கும் விட்ட கிராமங்கள் — மதுரை மண்டலத்தில் பெருங்குடி— இரட்டைக்குளம்—வெண்ணைநேந்தல்— குமுழங்குளம்— சிந்தாமணிப்பற்று முப்பதுமாவும், மண்டப்பாறை சீர்மை — முள்ளிப்பள்ளம் கிராமம், திருப்புவணச் சீர்மை புலவாய்க்காத்தட்டில், அல்லிக்குளம், செங்குளம், குண்டுகுளம், பசுமண்குளம், ஆக இந்த மூன்றுக்கு x — x இந்தக்கலிபொன் தொண்ணூறு நெல்லு ஆயிரக் கலத்தில் நித்யப்படி காலசந்திக்குத் தினமொன்றுக்கு அமுதுபடி கலமாக x — x ஆகவும் வருஷம் ஒன்றுக்கு கட்டளை உள்ளது”.

இக் கல்வெட்டுக்களால் அறியப்படுவன :—

பெருமாளின் பெயர் கூடலழகிய பெருமாள் என்பதும், கோயில் நித்யப்படிநைவேத்தியத்துக்கும்-கட்டளைக்கும் பல கிராமங்கள் விடப்பட்டன என்பதும், நித்திய பூஜைக்கு அமுதுபடியும் பொற்காசுகளும் நாயக்க மன்னர்களால் வழங்கப்பட்டன என்பதும், வேறு பல செய்திகளும் தெரிய வருகின்றன.

15. புராண வரலாறுகள்.

பக்தி மார்க்கத்தில் நின்று பரமனருளைப் பெற்ற முன்னோர் பலருடைய பழய வரலாறுகளாகிய புராணங்கள், பின் வழியினராகிய மற்றையோரும் அவனருளைப் பெறச் சாதனங்களாக — வழிகாட்டிகளாக அமைந்துள்ளன. இனிப்புப் பொருளில் மருந்தை உள்ளடக்கித் தருவதுபோலப் பல சாத்திரங்களின் உண்மைகளையும், தத்துவங்களையும் உள்ளடக்கிக் கதை வடிவங்களாக ஆன்றோர்கள் புராணங்களை அமைத்தனர். அவ்வரலாறுகளைப் படிப்பதால் அவைகளில் அடங்கிய உண்மைகளைக் கைக்கொண்டு, முன்னோர்கள் சென்ற மார்க்கங்களில் பிறரும் சென்று வழிபடுவதற்குப் புராணங்கள் உதவக்கூடும்.

இத்தலத்துப் பெருமைகள், வடமொழியில் பிரமாண்ட புராணம் க்ஷேத்திர மகாத்மியகாண்டம்-கூடலழகர் புராணத்தில் 12 அத்தியாயங்களில் கூறப்பட்டுள்ளன. தமிழில் உள்ள கூடற் புராணத்திலும் பல வரலாறுகள் சொல்லப்பட்டுள்ளன. அவைகளில் சில சுருக்கமாகக் கூறப்படும்.

1. பட்டர்பிரான் கிழியறுத்தது.

பாண்டியமன்னர்களில் வல்லபதேவன்என்பவன் செங்கோலோச்சி வருநாளில் அவன்மனம் அந்தமில் இன்பத்தை அடையவும், உண்மைப் பொருளை உணரவும் விரும்பியது. செல்வநம்பி என்னும் மறையவன் அரசனிடம் "வேத முடிவான பரம்

பொருள் இன்னதென்பதைப் புலவர் வாயிலாய் நிச்சயித்துக் கருதிய இன்பத்தை அடையலாம்'' என்று கூறினன். பாண்டியன் ஓர் தோரணக் கம்பத்தை நாட்டி அதன்மேல் பொற்காசுகள் நிறைந்த ஓர் கிழியைக்கட்டி "பரம்பொருள் உண்மையை நிச்சயித்து — வஸ்து நிர்ணயம் செய்து— எவர் முடிவு கூறுகிருரோ அவருக்கு இந்தப் பொற்கிழி அறுபட்டு உரிமையாகும்'' என்று எல்லா இடங்களுக்கும் பறை அறைவித்தான்.

கல்வியில் வல்ல அறிஞர் பலர் வந்து பேசியும் கிழி அறுபடவில்லை. திருமால், விட்டு சித்தராகிய பெரியாழ்வாரின் கனவில் தோன்றி பாண்டியன் அமைத்த பொற்கிழி தானே அறும்வண்ணம் சில உண்மைப் பொருள்களை அறிவித்தார். மறுநாள் பெரியாழ்வார் பாண்டியனது அவைக்குச் சென்றார். அரசனும் அவரை வரவேற்று உபசரித்தான். அப்போது பொறாமையுற்ற சிலர் அவரைப் பரிகசித்துப்பேசினர். வைகுந்தவாசனை திருமாலின் திருவருளைப்பெற்ற பெரியாழ்வார் வேதமுடிவா யுள்ள உண்மைப் பொருளை நிலைநாட்டி (வஸ்து நிர்ணயம் செய்து) திருமாலே பரம்பொருள் என உண்மையை அறிவுறுத்தினர். அவர் கூறிய சொற்கள் உண்மைப் பொருளை உணர்வதற்கு ஏற்றதாயும், விழுமிய பொருள் பொதிந்ததாகவும் இருந்தன. உடனே பொற்கிழி கட்டிய கம்பம் வளைந்து வரவே, பெரியாழ்வார் பொற்கிழியை அறுத்தெடுத்துக் கொண்டார்.

அரசனும், செல்வநம்பியும், ஏனையோரும் ஆழ்வாரைப் போற்றினர். பின்னர் அரசன் ஆழ்வாருக்குப் பட்டர்பிரான் எனப் பட்டம் வழங்கி யானையின்மீது அவரை அமர்த்தி நகர்வலம் வரச் செய்தான். "வேதங்கள் ஓதி விரைந்து கிழியறுத்த பட்டர்பிரான் வந்தான்" என்றும், "சென்று கிழி யறுத்து மால்தெய்வ மென்றுன் வாழியே" என்றும் வாழ்த்தொலிகள் முழங்கின. அப்போது பரமபதி யான திருமால் கருடவாகனத்தில் தோன்றி எல்லோ ருக்கும் காட்சி தந்தார். பட்டர்பிரானாகிய ஆழ்வாரும், அன்பின் மிகுதியால் இறைவன் எழில் நிலைபெற்றிருக்கும்படி திருப்பல்லாண்டு பாடி வாழ்த்தினர். பிறகு ஆழ்வார் தாம் கிழியறுத்துப் பெற்றபொருளைக்கொண்டு வில்லிபுத்தூர் வடபெருங் கோயிலுக்குப் பல திருப்பணிகளைச் செய்து வாழ்ந்து வந்தார்.

ஆழ்வார் உண்மைப் பொருளைக் கூறி நிலை நாட்டிய இடம் மெய்காட்டும் பொட்டல் எனவழங்கி வந்து தற்போது மெயின் கார்டு ஸ்கொயர் என வழங்கி வருகிறது. பெரியாழ்வார் பரம்பொருள் நிர்ணயம் செய்து காட்டியதைத்தழுவி இக்கோயிலில் ஆண்டு தோறும் நிகழும் வைகுண்ட ஏகாதசி உற்சவத்தில் பகல் பத்தின் முதல் நாளில் வஸ்து நிர்ணய உற்சவம் நடைபெற்று வருகிறது. அன்றைக்குப் பெருமாள் கருடவாகனத்திலும் பெரியாழ்வார் யானை வாகனத்திலும் எழுந்தருளிக் காட்சி கொடுப்பார்கள்.

மின்னார் தடமதிள்சூழ் வில்லிபுத்தூர் என்றொருகால்
சொன்னார் கழற்கமலம் சூடினோம்—முன்னால்
கிழியறுத்தா னென்றுரைத்தோம் கீழ்மையினில் சேரும்
வழியறுத்தோம் நெஞ்சமே வந்து.

பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தானென்று
ஈண்டிய சங்கம் எடுத்தூத—வேண்டிய
வேதங்கள் ஓதி விரைந்து கிழியறுத்தான்
பாதங்கள் யாமுடைய பற்று.

(இவை பாண்டிய பட்டர் அருளியவை.)

குறிப்பு: பெரியாழ்வார் அருளிச்செய்த திருப்பல்லாண்டு பாசுரங்களைக் கருங்கல்லில் செதுக்கப்பெற்று, இத்திருக்கோவிலில் பதிப்பிக்கப்பெற்றுள்ளது. மேற்கூறிய பாசுரக் கல்வெட்டானது சென்னை மாநில அறநிலைய பாதுகாப்புத்துறை அமைச்சர் கனம் M. பக்தவத்சலம், B.A., B.L., அவர்களால் 2—1—1961ல் திறந்து வைக்கப்பட்டது.

2. பிற வரலாறுகள்

ஆரியவிரதன் என்ற பாண்டியன் வைகை நதியில் தர்ப்பணம் செய்தபோது கையில் திருமால் மீனாகத் தோன்றினார் என்றும், அதனால் பாண்டியர்களுக்கு மீன்கொடி ஏற்பட்டதென்றும், அம்மையாருக்கு மீனாட்சி என்று பெயர் ஏற்பட்டதென்றும் கூறப்படுகிறது.

திருமால் சிவபெருமானுக்குப் பார்வதியைத் திருமணம் செய்வித்தார். அவருக்கு எட்டுறுப்பில் விளங்கும் விமானங்கள் (அஷ்டாங்க விமானம்) பாற்

கடல், வைகுண்டம், சூரியமண்டலம், திருக்கோட்டியூர், மதுரை முதலிய இடங்களில் ஏற்பட்டன.

பல தீர்த்தங்களில் சக்கரத்தீர்த்தக்கரையில் **காசிபர்** ஓர் ஆச்சிரமம் ஏற்படுத்தி அங்கு தவம் செய்து பெருமானைத் தரிசித்துப் பல பிள்ளைகளைப் பெற்று வாழ்ந்துவந்தார்.

பிருதுமன்னன் தன் மனைவியுடன் விமானத்தில் அமர்ந்து விண்ணில் பறந்து வந்தபோது அவன் விமானத்தின் நிழல் அஷ்டாங்க விமானத்தில் பட்டதால் விமானத்துடன் கீழேவிழுந்து உண்மை தெரிந்து பெருமானைப் போற்றித் தவம் புரிந்து வந்தான்.

ஆம்பிரவனம், சித்திரத் தேர்வனம் என்று பெயருள்ள இடத்தில் தேவர்கள் வந்து தவம் செய்த போது, காலநேமி என்பவன் தேவர்களுக்குத்துன்பம் செய்தான். திருமால் அஷ்டாங்க விமானத்திலிருந்து சென்று சக்கரத்தை ஏவி அவனைக்கொன்றார். சக்கரம் விழுந்த இடம் சக்கரத் தீர்த்தம் என வழங்குகிறது.

புலத்தியமுனிவர் கூடலழகரின் திருவருளால் விச்சிரவசு என்னும் புதல்வனைப்பெற்றுமேருமலையில் தவம் புரிந்து திருவடியடைந்தார்.

அம்பரீட மன்னன் மதுரைக்கு வந்து அழகரை வழிபட்டு அவராணைப்படி யானைமலைக் குகையில் பல காலம் தவம் புரிந்து திருவடியடைந்தார்.

ஊர்வசி புரூரவ மன்னனிடம் விருப்பங்கொண்டு இந்திரன் சாபத்தால் மண்ணுலகத்தை அடைந்து புரூரவனை மணந்து கூடலழகர் கோயிலின் அருகில் அரண்மனை கட்டிக்கொண்டு வாழும்போது தன் ஆடலாலும், பாடலாலும் கூடலழகரை மகிழ்வித்து வந்தாள். பெருமாளின் திருவருளால் அவள் மறுபடியும் விண்ணுலகடைந்தாள்.

மலையத்துவசபாண்டியன் மதுரையைத் தலைநகராகக்கொண்டு மேருமலையில் தன் பெயரைப் பொறித்த பெருமை யுடையவன். அவன் அகத்திய முனிவர் அருளிய விமானத்தில் ஏறிச்செல்லும்போது அழகர்மலை மேற்சென்றதால் விமானம் நின்று விட்டது. அப்போது அசரீரிமொழி தோன்றியபடி அரசன் சிலம்பாற்றில் நீராடிப் பல திருப்பணிகளைச் செய்தான். பின்பு அவன் இடபமலை அழகனைத் துதித்து அருள்பெற்றுப் பிறகு மதுரைக்கு வந்து பல திருப்பணிகள் செய்தான். தடாதகைப் பிராட்டி யாரைத் தனக்கு மகளாக அருளப்பெற்றாள். சிவ பெருமான் சுந்தரபாண்டியனுக வந்து பிராட்டியாரை மணம் செய்துகொண்டான்.

3. பிற்காலத்தில் பெரியாழ்வார், திருமங்கை யாழ்வார், திருமழிசை ஆழ்வார், பிள்ளைப்பெருமாள் ஐயங்கார், முதலியோர் இத்தலத்துக்கு வந்து பெருமாளை வழிபட்டுப் பாடல்களைப்பாடி யுள்ளார்கள்.

குறிப்பு :— தேவஸ்தானத்தார் கொடுத்த தலபுராணக் குறிப்புக்களிலிருந்து இவ்வரலாறுகள் தொகுத்துக் கூறப்பட்டன.

மதுரை ஸ்ரீ கூடலழகர் கோவில்



ஒரே கல்லில் செய்யப்பட்ட பலகணி



மதுரை ஸ்ரீ கூடலழகர் கோவில் — உற்சவ மூர்த்திகள்

ShriBalaSubiksham
Ramasubramanian



மதுரை ஸ்ரீ கூடலழகர் கோவில் "அஷ்டாங்க விமானம்"

16. இலக்கியப் பாடல்கள்.

ஸ்ரீ

பெரியாழ்வார் மதுரையில் அருளிச்செய்த

திருப்பல்லாண்டு.

காப்பு

குறள்வெண்செந்துரை

(தோடயம்-நாட்டை ராகம்-ஜம்பை தாளம்)

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
பலகோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா! உன்
செவ்வடி செவ்வி திருக்காப்பு. (1)

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

நாட்டை ராகம்-அட தாளம்)

அடியோ மோடும் நின்னோடும் பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு
வடிவாய் நின்வல மார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு
வடிவார் சோதிவலத் துறையும் சுடராழியும் பல்லாண்டு
படைபோர் புக்கு முழங்கும் அப்பாஞ்ச சன்னியமும் பல்லாண்டே. (2)

வாழாட் பட்டுநின்றீ ருள்ளீரேல் வந்துமண்ணும் மணமும் கொண்மின்
கூழாட் பட்டு நின்றீர்களை எங்கள் குழுவினில் புகுதலொட்டோம்
ஏழாட் காலும் பழிப்பிலோம் நாங்கள் இராக்கதர்வாழ் இலங்கை
பாழாளாகப் படை பொருதானுக்குப் பல்லாண்டு கூறுதுமே. (3)

ஏடுநிலத்தில் இடுவதன் முன்னம்வந்து எங்கள் குழாம் புகுந்து
கூடுமன முடையீர்கள் வரம்பொழி வந் தொல்லைக் கூடுமினோ
நாடும் நகரமும் நன்கறிய நமோ நாராயணாய வென்று
பாடுமன முடைப்பத் தருள்ளீர்! வந்து பல்லாண்டு கூறுமினே. (4)

அண்டக் குலத்துக் கதிபதியாகி அசுரரிராக் கதரை
இண்டைக் குலத்தை எடுத்துக் களைந்த இருடீகேசன் தனக்கு
தொண்டைக் குலத்திலுள்ளீர்! வந்தடி தொழுது ஆயிரநாமம் சொல்லி
பண்டைக் குலத்தைத் தவிர்ந்து பல்லாண்டு பல்லாயிரத்தாண்
[டென்மினே. (5)

எந்தை தந்தைதந்தை தந்தைதம் மூத்தப்பன் ஏழ்படி கால்தொடங்கி
வந்துவழி வழிஆட் செய்கின்றோம்*திருவோணத் திருவிழவில்
அந்தியம் போதிலரி யுருவாகி அரியை யழித்தவனை
பந்தனை திரப் பல்லாண்டு பல்லாயிரத் தாண்டென்று பாடுதுமே. (6)

தீயிற் பொலிகின்ற செஞ்சுடராழி திகழ் திருச் சக்கரத்தின்
கோயிற் பொறியாலே ஒற்றுண்டு நின்று குடிகுடி ஆட்செய்கின்றோம்
மாயப் பொருபடை வாணனை ஆயிரந் தோளும் பொழிகுருதி
பாய*சுழற்றிய ஆழிவல் லானுக்குப் பல்லாண்டு கூறுதுமே. (7)

நெய்யிடை நல்லதோர் சோறும் நியதமும் அத்தாணிச் சேவகமும்
கையடைக் காயும் கழுத்துக்குப் பூணொடு காதுக்குக் குண்டலமும்
மெய்யிட நல்லதோர் சாந்தமும் தந்துஎன்னை வெள்ளுயிராக்க வல்ல
பையுடை நாகப்ப கைக்கொடி யானுக்குப் பல்லாண்டு கூறுவனே. (8)

உடுத்துக் களைந்த நின்பீதக வாடை யுடுத்துக் கலத்ததுண்டு
தொடுத்த துழாய் மலர்சூடிக் களைந்தன சூடும் இத்தொண்டர்களோம்
விடுத்த திசைக் கருமம் திருத்தித் திருவோணத் திருவிழவில்
படுத்த பைந்நாகணைப் பள்ளி கொண்டானுக்குப் பல்லாண்டு
கூறுதுமே. (9)

எந்நாள் எம்பெருமான் உன்தனக் கடியோமென் றெழுத்துப் பட்ட
அந்நாளே*அடியோங் களடிக்குடில் வீடுபெற்று உய்ந்தது காண்
செந்நாள் தோற்றித் திருமதுரையுள் சிலைகுனித்து*ஐந்தலைய
பைந்நாகத் தலைப்பாய்ந் தவனே ! உன்னைப் பல்லாண்டு கூறுதுமே(10)

அல்வழக் கொன்றுமில்லா அணிகோட்டி யர்கோன்*அபிமான துங்கன்
செல்வனைப் போலத் திருமாலே! நானும் உனக்குப் பழவடியேன்
நல்வகை யால்நமோ நாராயணா வென்று நாமம் பலபரவி
பல்வகை யாலும் பவித்திரனே! உன்னைப் பல்லாண்டு கூறுவனே(11)

பல்லாண் டென்று பவித்திரனைப் பரமேட்டியை*சார்ங்க மென்னும்
வில்லாண் டான்தன்னை வில்லிபுத்தூர் விட்டுசித்தன் விரும்பிய சொல்
நல்லாண் டென்று நவின்றுரைப்பார் நமோ நாராயணாய வென்று
பல்லாண் டும்பர மாத்தனைச் சூழ்ந்திருந் தேத்துவர் பல்லாண்டே (12)

2 அழைப்பன் திருவேங்கடத்தானைக் காண
இழைப்பன் திருக்கூடல் கூட—மழைப்பேர்
அருவி மணிவரன்றி வந்திழிய—யானை
வெருவியா வொடுங்கும் வெற்பு

(திருமழிசையாழ்வார்)

3 கோழியும் கூடலும் கோயில்கொண்ட
கோவலரே ஒப்பர் குன்ற மன்ன
பாழியந் தோளும் ஓர் நான் குடையர்
பண்டு இவர் தம்மையும் கண்டறியோம்
வாழியரோ இவர் வண்ணம் எண்ணில்
மாகடல் போன்றுளர் கையில் வெய்ய
ஆழியொன் றேந்தி ஓர் சங்கு பற்றி
அச்சோ ஒருவர் அழகியவா

(திருமங்கையாழ்வார்)

ஸ்ரீ கூடலழகப்பெருமாள்

4 வில்லாண்ட வடவரையான் மணம்புணர அட்டாங்க
விமான மென்னும்
இல்லாண்டு புயன்சனகன் காசிபனூர் பிருதுவன்
பரீடன் கூடல்
தொல்லாண்ட ப்ரூரவசு மலயகேதனன் முதலோர்
தொழப்புத்தூரான்
பல்லாண்டு பாடவந்த மல்லாண்ட தோளனடி
பணிதல் செய்வாம்.

5 ஸ்ரீ மதுரவல்லித்தாயார்

மதியிருக்கும் திருமுகமும் கனியிருக்கும் துவர்வாயும்
வழுத்துமன்பர்
துதியிருக்கும் குழைக்காதும் புயலிருக்கும் குழற்கானும்
துணைக்கண் மானும்
பதியிருக்கும் பொருப்பனைய கனதடமும் துடியிடையும்
பதுமைக்கையும்
ததியிருக்கும் கொடிபோன்ற மதுரவல்லியார் பதம்
கருத்துள்வைப்பாம்.

6 திருமாலின் மூன்று கோலங்கள்

நின்ற தெந்தை யூரகத்திருந்த தெந்தை பாடகத்து
அன்று வெஃகணைக் கிடந்த தென்னிலாத முன்னெலாம்
அன்றுநான் பிறந்திலேன் பிறந்தபின் மறந்திலேன்
நின்றதும் இருந்ததும் கிடந்ததும் என் நெஞ்சுளே.

(திருமழிசையாழ்வார்)

7 ஆடவர்கள் எங்ஙன் அகல்வார் அருள்சுரந்து
பாடகமும் ஊரகமும் பாம்பணையும்—நீடியமால்
நின்றான் இருந்தான் கிடந்தான் இதுவன்றோ
மன்றூர் பொழிற்கச்சி மாண்பு.

(கணிகண்ணன்)

8 பச்சைமா மலைபோல் மேனிப்
பவளவாய்க்கமலச் செங்கண்
அச்சுதா அமரர் ஏறே
ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிரயான் போய்
இந்திரலோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்கமாநகருளானே.

ShriBalaSubiksham
Ramasubramanian

(தொண்டரடிப்பொடியாழ்வார்)

9 குலம் தரும் செல்வம் தந்திடும் அடியார்
படுதுயர் ஆயின வெல்லாம்
நிலந்தரம் செய்யும் நீள் விசும் பருளும்
அருளொடு பெருநிலம் அளிக்கும்
வலந்தரும் மற்றும் தந்திடும் பெற்ற
தாயினும் ஆயின செய்யும்
நலந்தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம்

(திருமங்கையாழ்வார்)

10 நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி

வாழ்விப்பான் எண்ணமோ வல்வினை இன்னுமெனை
ஆழ்விப்பான் எண்ணமோ அஃதறியேன்—தாழ்விலாப்
பாடலழகார் புதுவைப்பட்டர்பிரான் கொண்டாடும்
கூடலழ காரின் குறிப்பு

(பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்)

11 கருடன்

கருமுகில் தாமரைக்காடு பூத்து நீடு
இருசுடர் இருபுறத்தேந்தி ஏடவிழ்
திருவொடும் பொலியவோர் செம்பொற் குன்றின் மேல்
வருவதுபோல் கலுழன்மேல் வந்து தோன்றினன்.

12 அனுமான்

அஞ்சிலே யொன்று பெற்றான் அஞ்சிலே யொன்றைத்தாவி
அஞ்சிலே யொன்றாக ஆரியர்க்காக வேகி
அஞ்சிலே யொன்று பெற்ற அணங்குகண்டயலா ரூரில்
அஞ்சிலே யொன்றை வைத்தான் அவனம்மை அளித்துக்
[காப்பான்.

(கம்பர்)

13 ஆழ்வார்கள்

பொய்கை பூதன் பேயார் பொன்மழிசைக் கோன் மாறன்
செய்ய மதுரகவி சேரர் பிரான்—வையகமெண்
பட்டர்பிரான் கோதை தொண்டர் பாதப்பொடி பாணன்
கட்டவிழ்த்தார் வாட்கலியன் காப்பு.

(பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்)

14 ஸ்ரீ ஆண்டாள்

அன்ன வயல் புதுவை ஆண்டாள் அரங்கற்குப்
பன்னு திருப்பாவை பல்பதியம்—இன்னிசையால்
பாடிக்கொடுத்தாள் நற்பாமாலை பூமாலை
சூடிக்கொடுத்தாளைச் சொல்லு.

(தனியன்)

15 இராமானுஜர்

பூமன்னுமாது பொருந்திய மார்பன் புகழ்மலிந்த
பாமன்னு மாறன் அடிபணிந்துய்ந்தவன் பல்கலையோர்
தாம் மன்னவந்த இராமாநுசன் சரணாரவிந்தம்
நாம்மன்னி வாழ நெஞ்சே சொல்லோம் அவன்நாமங்களே

(இராமானுஜ நூற்றந்தாதி)

16 மணவாளமாமுனிகள்

மன்னுபுகழ் சேர் மணவாள மாமுனிவன்
தன்னருளால் உட்பொருள்கள் தம்முடனே—சொன்ன
திருவாய்மொழி நூற்றந்தாதியாம் தேனை
ஒருவா தருந்து நெஞ்சே உற்று.

17 சேனை முதலியார்

ஓங்கு துலாப் பூராடத் துதித்த செல்வன் வாழியே
ஒண்டொடியாள் சூத்திரவதி உறைமார்பன் வாழியே
தேங்குபுகழ ரங்கரையே சிந்தை செய்வோன் வாழியே
சேனையர்கோன் செங்கமலத் திருவடிகள் வாழியே.

18 நாதமுனிகள்

ஆனிதனில் அனுடத்தில் அவதரித்தான் வாழியே
ஆளவந்தார்க் குபதேசம் அருளிவைத்தான் வாழியே
நானிலத்திற் குரு வரையை நாட்டினான் வாழியே
நலந்திகழும் நாதமுனி நற்பதங்கள் வாழியே.

ஸ்ரீ கூடலழகப்பெருமாள் மலரடி போற்றி.

கோயில் விளக்கம்.

கோயில் :	ஸ்ரீ கூடலழகர் கோயில்
இடம் :	மதுரை நகர்
மூலவர் :	ஸ்ரீ கூடலழகர்
கோலம் :	அமர்ந்த கோலம் (மற்றக் கோலங்களும் உள்ளன)
உற்சவர் :	வியூக சௌந்தரராஜப்பெருமாள்
விமானம் :	அஷ்டாங்க விமானம்
தாயார் :	ஸ்ரீ மதுரவல்லி
தீர்த்தம் :	ஹேம தீர்த்தம் முதலியன.

திருமாலுக்குரிய 108 திருப்பதிகளுள் ஒன்று. அமர்தல், நிற்றல், சயனம் ஆகிய மூன்று கோலங்களையும் உடையது. பெரியாழ்வார், திருமங்கையாழ்வார், திருமழிசையாழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பெற்றது. மதுரை நகரில் ரயில் நிலயத்திலிருந்து தென் கிழக்கில் 2 பர்லாங் தூரத்தில் கோயில் உள்ளது.

ShriBalaSubiksham Ramasubramanian

ஸ்ரீ பால சுபிக்ஷம்
இராமசுப்பிரமணியன்